மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூல் விலையேற்றம் ஒரு காரணம் என்று அவர்கள் தரப்பிலும் சொல்லப்பட்டது. நேற்று முன்தினம் நூல் விலையேற்றத்தைத் தடுக்கவும், குறைந்த விலையில் நூலை விநியோகம் செய்யவும் ஆலை அதிபர்களைக் கூட்டி மாநில அரசு ஒரு மாநாடு நடத்தியது. அதிலே சில யோசனைகள் கூறப்பட்டன. அந்த யோசனைகளின் அடிப்படையில் நூல் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : ஜவுளிக் கடைகளில் பனியன் போன்ற பொருள்களின்மீது ரிடைல் பிரைஸ், ஹோல்சேல் பிரைஸ் இரண்டையும் துணிகளின் மேல் எழுதி வைத்திருக்கிறார்களா என்று பார்க்கும்போது சில கடைகளில் அந்த விலைகளைக் குறிக்காது அதிக விலைக்கு விற்பதாக நீதிமன்றத்தில் கூட வழக்குகள் வந்திருக்கின்றன. எல்லாக் கடைகளிலும் பனியன் போன்றவற்றை விற்கும்போது அதன் ரிடைல் பிரைஸை அந்தத் துணிகளில் அச்சடித்து விற்கப்பட வேண்டுமென்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்று கண்ட்ரோல் பிரைஸ் மீதெல்லாம் மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க டெக்ஸ்டைல் கமிஷனர் என்ற அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் மூலம் இவை கண்காணிக்கப்படுகிறது.

அரசுப் போக்குவரத்து

*338 வினா.—**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கத்துறையில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன ?

(இ) அதன்மூலம் கிடைக்கும் மாத வருமானம் என்ன ?

(உ) இந்த வருமானம் மூலதனத்திற்கு என்ன விகிதாச் சாரத்தில் வருகின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 31—12—1969 தேதி நிலவரப்படி துறையிலிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,968.

(இ) 1969-ம் ஆண்டு டிசம்பர் மாத வருமானம் ரூ. 120.26 லட்சம்.

(உ) 7.3 சதவிகிதம்.

திரு. ஏம். இராஜா : 1,968 பேருந்துகள் ஓடியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தின் மூலதன விகிதாசாரம் 7.3 சதவிகிதம் என்று கூறினார்கள். இந்த வருமானம் நிகர வருமானமா அல்லது மொத்த வருமானமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மொத்த வருமானம்.

THIRU K. VINAYAKAM : If the net income is worked out, it would result in a great loss. Does the Minister accept this theory?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : This is not the occasion to accept or deny theories.

திரு. எஸ். இராமச்சந்திரன் : அரசாங்கத்துறையில் ஓடுகிற இந்த பஸ்களின் மூலம் கிடைக்கிற வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் லாபத்தில் ஓட்டுவதற்கும் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

(பதில் இல்லை.)

கிழக்குக் கடற்கரைச் சாலை

*339 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் 5—7—1967-ல் 173-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) இந்தச் சாலை செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களின் வழியாகச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரையில் ஒப்பளிப்பு வழங்கவில்லை. எனினும் மாமல்லபுரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மரக்காணம் வரையில் விட்டுப் போன இணைப்புகளை அமைப்பதற்கும், கோவளத்திற்கு அருகில் உப்பங்கழியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுவதற்கும் இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளும்படி இந்திய அரசை இணங்க வைப்பதற்கு இடைவிடாமல் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

(இ) திட்டமிட்டுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட இடங்களின் வழியாகச் செல்லும் :—

1. பூஞ்சேரி
2. வாயலூர்
3. கூவத்தூர்
4. வடபட்டணம்
5. முகையூர்
6. பெருந்தொறவு
7. பரமங்கேணி
8. ஓடையூர்
9. முனிபிள்ளைச் சத்திரம்
10. பனையூர்